கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீ.ஆ.து, பொ,ப,து, பாலாறு வடிநில வட்டம், சென்னை–5.

முன்னிலை : பொறி. அ.முத்தையா, பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர்,

<u>செயல்முறை எண்: இ2/ 3285 / 2019 / நாள். 03.08.2021</u>

பொருள்– பணியமைப்பு – பொ.ப.து. – நீ.ஆ.து. த.நா.அ.ப.தொகுதி.– காலஞ்சென்ற திரு.எம்.டேவிட், அவர்களின் மகன் –திரு. டி.எசேக்கியல் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் – பதவியில் பணிவரன்முறை செய்தல்– தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் –குறித்து.

பார்வை 1) முதன்மை தலைமைப்பொறியாளர் நீ.ஆ.து. மற்றும்தலைமைப் பொறியாளர் ( பொது), பொ.ப.து, சென்னை–5 செ.மு.எண். எஸ்.3 (4) 33806 / 2011 / நாள் 27.07.2018.

2) தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து, சென்னை மண்டலம், சென்னை–5 அவர்கள் செ.மு.எண் இ1 (1) / 8208 / 2018 / நாள் 23.08.2018.

3) இவ்வலுவலக செயல்முறை ஆ.எண். இ2 / 2823 / 2018 / நாள். 27.08.2018.

4) அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை நாள்.02.03.2016.

5) அரசாணை நிலை எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை நாள்.26.02.2021.

6) செயற்பொறியாளர், கொசஸ்தலையாறு வடிநிலகோட்டம்,திருவள்ளூர் அவர்களின் க.எண்.நிஎ1 / கோ.107 / 2021 / நாள். 01.07.2021.

*********

பார்வை 1ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து. மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை– 5 அவர்களின் செயல்முறை ஆணையின் படி காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. எம்.டேவிட் அவர்களின் மகன் திரு. டி.எசேக்கியல் என்பவருக்கு தமிழ்நாடு மாநிலஅரசு பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம்2016 பிரிவு17(i) –ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய ஊதிய ஏற்ற முறை (தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2017–ன்படி நிலை8) ரூ.19500–62000 என்ற விகிதத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வட்ட கட்டுப்பாட்டிலுள்ள செயற்பொறியாளர், கொசஸ்தலையாறு வடிநிலகோட்டம், திருவள்ளூர் அலுவலகத்தின் பணியில் 31.08.2018 பி.ப. முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

| வ. எண். | பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைசெய்ய விளம்பப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. டி.எசேக்கியல் | இளநிலை உதவியாளர் | 10.06.1981 | 31.08.2018 பி.ப. | 31.08.2018 பி.ப. |

இது தொடர்பாக பார்வை 4ல் காணும் அரசாணை (நிலை) எண்.80 ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசுப்பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு 19.02.2016 அன்று சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்திட ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

பார்வை 5ல் காணும் அரசாணை (நிலை) எண்.48–ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள கருணைஅடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பத்தி 5.2ல் தெரிவித்துள்ள 5.1–ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority ) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( one level higher tha the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மேற்காணும் பணிவரன்முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடங்கி, த.நா.அ.ப.தொகுதி 3–ன் கீழ் அடங்கிய சிறப்பு விதிகளின் படி மூன்றாண்டுகளுக்குட்பட்ட பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்திற்கு தகுதிகாண்பருவத்தில் அமர்த்தப்படுகிறார்.

தகுதிகாண்பருவ காலத்தில் தனியர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி முடிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடுஅரசு அலுவலக நடைமுறைநூல் (Government Office Manual ) தேர்வில் தேர்ச்சி மற்றும் கணக்கு தேர்வு பாகம் 1 மற்றும் 2 தேர்ச்சி பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

தனியர் மேற்காணும் நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை முடிக்கப்படவேண்டும் என ஆணை வழங்கப்படுகிறது. .

அதன் அடிப்படையில் தனியரின் பணியினை வரன்முறை செய்ய தனியரின் பணிப்பதிவேடு ஆய்வு செய்ததில் இளநிலை உதவியாளர் பணிக்காலத்தில் இவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளோ, குற்றச்சாட்டுகளோ, ஏதும் நிலுவையில் இல்லை என தெரியப்படுகிறது. எனவே, மேற்காணும் அரசாணைகளின் படி திரு. டி.எசேக்கியல், இளநிலை உதவியாளரின் பணி, தனியர் பணியில் சேர்ந்த நாளான 31.08.2018 பி.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் **பணிவரன்முறை** செய்து விளம்பி இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/– அ.முத்தையா,
கண்காணிப்புப்பொறியாளர், நீ.ஆ.து,
பாலாறு வடிநில வட்டம், சென்னை–5.

பெறுநர்.

திரு. டி.எசேக்கியல், இளநிலை உதவியாளர்,
கொசஸ்தலையாறு வடிநிலகோட்டம், திருவள்ளுர்.

வழி– செயற்பொறியாளர், கொசஸ்தலையாறு வடிநிலகோட்டம், திருவள்ளுர்.

நகல்– செயற்பொறியாளர், கொசஸ்தலையாறு வடிநிலகோட்டம், திருவள்ளுர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காவும் அனுப்பப்படுகிறது.

நகல்:- தலைமைப்பொறியாளர், பொபது , நீ.ஆ து, சென்னை மண்டலம் சென்னை.5 அவர்களுக்கு தங்கள் க.எண்.இ1 / (1) /1360 2021 / நாள். 22.03.2021 ன் தொடர்ச்சியாக பணிந்தனுப்பப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர் சார்பில், நீ.ஆ.து,
பாலாறு வடிநில வட்டம், சென்னை–5.

செயற் பொறியாளர் பொ.ப.து
கொசஸ்தலையார் வடிநில கோட்டம் நீ.ஆ.து
திருவள்ளூர்

03/09/21